தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12.11.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மரபணு வரிசைப்படுத்துதல் தரவு பகுப்பாய்வு குறித்த பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தகவலியல் துறை, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையம் சார்பில், வென்ச்சர் கேப்பிட்டல் திட்டத்தின் கீழ் மரபணு வரிசைப்படுத்துதல் தரவு பகுப்பாய்வு குறித்த பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 11.11.2025 முதல் 14.11.2025 வரை நடைபெறுகிறது. இந்நிகழ்வில் இந்தியாவின் பல்வேறு நிறுவனங்களில் இருந்து பங்கேற்பாளர்கள் கலந்து கொள்கின்றனர். இப்பயிற்சியில் மரபணு பொறியியல், உயிரி தொழில்நுட்பம், தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல், வேளாண்மை மற்றும் நுண்ணுயிரியல் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த 16 பங்கேற்பாளர்கள் பங்கேற்கின்றனர்.

வரவேற்புரையை தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர்தகவலியல் துறைத் தலைவர் முனைவர் எல். அருள் வழங்கினார். இந்த பயிற்சி நிகழ்ச்சியின் நோக்கம் மற்றும் வளர்ந்து வரும் மரபணு வரிசைப்படுத்துதல் தரவு பகுப்பாய்வு தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். பின்னர் பங்கேற்பாளர்களின் அறிமுகம் நடைபெற்றது. தொடக்க உரையை முனைவர் என். செந்தில், இயக்குனர், CPMB&B வழங்கினார். தனது உரையில், மரபணு அறிவியல் தொடர்பான தரவுகள் மிக வேகமாக அதிகரித்து வரும் நிலையில், மேம்பட்ட மரபணு வரிசைப்படுத்துதல் தொழில்நுட்பங்களையும் அவற்றின் விளக்கங்களையும் கற்றுக்கொள்ளுதல் அவசியம் என்பதை வலியுறுத்தினார்.

முனைவர் R. ரவிகேசவன், இயக்குனர், CPBG, உரையாற்றி வாழ்த்துத் தெரிவித்தார். மரபணு வரிசைப்படுத்துதல் தரவு பகுப்பாய்வு தொழில்நுட்பத்தின் அருமை, அதன் பரவலான பயன்பாடுகள் மற்றும் அது வழங்கும் நவீன அறிவியல் முன்னேற்றங்களை உண்மையான உலக உதாரணங்களுடன் அவர் விளக்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**